[டாக்டர் கா. காளிமுத்து]

இது தவிர, இக்கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிக்கொன்றும், பிற பகுதியினருக்கு ஒன்றுமாக இரண்டு கையிறைப் பான்கள் உபயோகத்தில் உள்ளன.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விக்கிரமங்கலம் கிராமம் சுமார் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியாக இருக்கிறது. அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற குழாய் போடும் பணி அத்தனையும் மிகவும் காலதாமதமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் முக்கியமாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்த வறட்சியான நிலையில், கூடிய விரைவிலே அந்தக் குழாய்களைப் போடும் பணியை முடுக்கி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ? அந்தப் பணி நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : : நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

(25) கூடலூர் பேரூராட்சி பகுதிகளில் குடிநீர் வழங்குதல்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘ கூடலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக குடிநீர் வழங்கப்படாமல் இருப்பது பற்றியும், இதனால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறட்சியால் கோக்கால், அலஹலா போன்ற நீரோடைகள் வறண்டு விட்டதால் 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25ஆம் தேதியிலிருந்து தினமும் பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் தடை ஏற்பட்டது. கூடலூர் நகர எல்லையிலுள்ள தொரப்பள்ளி ஆற்றிலிருந்து ஒரு லாரி மூலம் தண்ணீர் கொண்டு வந்து 60,000 லிட்டர் குடிநீர், ஹெல்த் கேம்ப் பகுதியில் உள்ள குடிநீர் தேக்கத்தில் விடப்பட்டு ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மூலம் சுற்று முறையில் மூன்று நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

கவன ஈர்ப்புகள்

[டாக்டர். க. காளிமுத்து]

கூடலூர் நகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு பம்ப் செட்டுகள் பொருத்தப்பட்டுள்ள கிணறு மூலம் குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது. சுங்கம், செவ்வடிப்பேட்டை பகுதிகளுக்கு அதி காரிவயல் என்ற இடத்தில் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ள கிணற்றிலிருந்து 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14ஆம் நாள் முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25ஆம் நாள் முதல் துப்புக்குட்டிப் பேட்டை பகுதியில் உள்ள காசிம் வயல் என்ற இடத்தில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள கிணற்றிலிருந்து தினமும் சுமார் 5,000 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

கூடலூர் நகருக்கு குடிநீர் தேக்கங்களிலிருந்தும் பம்ப்செட்டு பொருத்தப்பட்ட கிணறுகளிலிருந்தும், லாரி மூலமும் தினமும் சுமார் 2,25,000 லிட்டர் சுற்று முறையில் மூன்று நாட்களுக்கு ஒருமுறை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிதண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, பொது மக்கள் பேரூராட்சி நிர்வாகத்துடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் வழங்குவதில் பொதுமக்களிடமிருந்து புகார் எதுவும் வரவில்லை. கடந்த ஒரு வார காலமாக நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை என்பது சரியல்ல.

கூடலூர் பேரூராட்சியும், வழியோர கிராமங்களும் நிலையான குடிநீர் வசதி பெறும் வகையில், உலக வங்கியின் உதவியுடன் ரூ. 1.3 கோடி செலவில், ஹெலன் நதியை ஆதாரமாகக் கொண்டு ''ஹெலன் குடிநீர்த் திட்டம்'' தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, குடி தண்ணீர் வழங் கும் கிணறுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள பம்ப் செட்டுகள் அடிக் கடி பழுதடைந்து விடுகின்றன. அதனால் குடிதண்ணீர் வழங்கு வது கஷ்டமாக இருக்கிறது. அந்த பழுதடைந்த பம்ப் செட்டு களுக்கு பதில் வேகமாக புதிய பம்ப் செட்டுகளை வாங்கி பொருத் தவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உலக வங்கியின் உதவி யுடன் ஹெலன் குடிநீர் திட்டத்திற்கு 1.2 அல்லது 1.2 கோடி செலவிடப்படும் என்று ஏற்கெனவே அறிவித்தார்கள். இப் போது அதே திட்டத்திற்கு 1.3 கோடி செலவில் கொண்டு வர அந்த திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது என்று சொல்லியிருக் கிறார்கள். இதில் எது உண்மை என்பதை அரசு எனக்கு விளக்குமா என அறிய விரும்புகிறேன்.

கவன ஈர்ப்புகள்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பம்ப் செட்டுகள் பழுதடைந்த உடனேயே அவைகளை தூக்கி எறிந்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக புதியதாக வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்வது சரியல்ல. என்ன பழுது ஏற்பட்டிருக்கிறது, அவைகளை சரி செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அந்த ஹெலன் குடிநீர் திட்டப் பணிகளின் ஆய்வு வெகு விரைவிலே முடிவு அடையும். அது வாரியத்தின் ஆய்வில் உள்ளது. செயலுக்குக் கொண்டு வருவதற்கு வெகுவிரைவிலே அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அவரவர் இடங்களிலே அமைதியாக உட்காருவது நல்லது.

(26) குமரி மாவட்ட கடற்கரை கிராமங்களின் குடிநீர் பிரச்சனை.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குமரி மாவட்டத்திலுள்ள கடற்கரை கிராமங்களான முட்டம், கடியப்பட்டினம், குறும்பனை, வாணியக்குடி, சைமன் காலனி ஆகிய பகுதிகளிலுள்ள குடிநீர் குழாய்கள் அனைத்தும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி மக்கள் குடிநீருக்காக கஷ்டப்படும் நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரைக் கிராமங்களான முட்டம், கடியப்பட்டினம், வாணியக்குடி, சைமன்காலனி ஆகிய கிராமங்களில் குடிதண்ணீர் சீராக தொடர்ந்து வினியோகிக்கப்பட்டு வருகிறது. கீழ்குறும்பனை கிராமத்தில் உள்ள குடிநீர் திட்ட நீருந்து மோட்டார் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. குடிநீர் குழாய்கள் துருபிடித்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அவைகளை பழுதுபார்க்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். தற்போது மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் பக்கத்தில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் இரு பொதுக் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

திரு. எப். எம். இராசரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் முட்டம், கடியப்பட்டினம், வாணியக்குடி, சைமன் காலனி ஆகிய கிராமங்களில் குடிதண்ணீர் சீராக தொடர்ந்து வினியோகிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிடப்